DEPOSITION OF WITNESS

**Chapter XXIII code of Criminal Procedure**

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Special Sessions Case No. 38/2021**

**Deposition of Witness for Prosecution : P.W. 11**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | இளையராஜா | தகப்பனார் பெயர்<br>கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 27.06.2024

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது கடினவயல் நடுகாட்டில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் வேலை பார்த்துக்கொண்டிருக்கிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். என்னை அவர்களுக்குதெரியுமா என்ற விபரம் எனக்கு தெரியாது. கடந்த 05.09.2021ம் தேதி மனோகரன் மீன் பிடிக்க சென்ற போது மழை பெய்த காரணத்தினால் பக்கத்தில் உள்ள ஜெரால்டு கார் செட்டில் போய் ஒதுங்கினார். ஆஜர் எதிரிகள் அங்கு இ ருந்தனர். அப்பொழுது இறந்து போன மனோகரன் போய் ஆஜர் எதிரிகளிடம் யாரப்பா இங்கு நிற்கிறது என்று கேட்டார்கள். அதற்கு பின் எதிரிகளின் கிட்ட போய் இறந்து போன மனோகரன் என்னப்பா பசுபதி வாத்தியார் தேவர் பையனா என்று கேட்டிருக்கிறார். உடனே ஆஜர் எதிரிகள் கோவப்பட்டு சாதி பெயரை சொல்லி திட்டி மனோகரினை அடித்துள்ளார்கள். உடனே மனோகர் தற்காப்பிற்காக பக்கத்தில் வெல்டிங்க கடைக்கு சென்று ஒரு ராடை எடுத்த போது ஆஜர் எதிரிகள் ஓடி சென்று தகாத வார்தை பேசி ஆஜர் எதிரிகள் மனோகரை கீழே தள்ளிபோட்டு மண்டையில் அடித்துள்ளார்கள். அந்த சத்தம் கேட்டு பட்டறைக்கு எதிரில் உள்ள சாமுவேல், பாப்பாத்தி, சகாயம்மற்றும் சிங்காரம், சத்திரவேல் ஆகியோர் சேர்ந்து மறைத்துள்ளார்கள். அதன் பிறகு மனோகரன் மகன் டேவிட் சகாயம், காசிநாதன்

மகன் தமிழ் மணி ஆகியோர் இருவரும் அங்கு சென்று பார்த்துள்ளனர் அங்கே ஒரே கூட்டமாக இருந்தது. அங்கு மனோகரன் ஜட்டியோடு உட்கார்ந்திருந்துள்ளார். மனோகரன் மகன் டேவிட் சகாயம் ஆஜர் எதிரிகளிடம் ஏன் எதற்காக அடித்தீர்கள் என்ற கேட்டபோது அவரை நாங்கள் அடித்துள்ளோம் உன்னையும் அடிப்பபோம் என்று ஆஜர் எதிரிகள் கூறியுள்ளனர். சம்பவம் நடந்த பிறகு ஆஜர் எதிரிகளான திரவியத்தின் அண்ணன் ஆட்டோ எதிரில் வந்திருக்கிறது. அதன் பிறகு நாடிமுத்து மகன் ஹரிஹரன் அவரடைய ஆட்டோவில் மனோகரை ஏற்றி கொண்டு டேவிட் சகாய ராஜ், தமிழ்மணி, சித்திரவேல், யோனஸ் ஆகிய நான்கு பேரும் வேதாரண்யம் கருப்பம்பலம் அரசு மருத்துவமனைக்கு சென்றுள்ளனர், அங்கு மருத்துவர் இல்லாத காரணத்தினால் வலி மாத்திரை கொடுத்துள்ளனர்.அதன் பிறகு ஐஸ்பேண்டு கொடுத்துள்ளனர். வலி வரும்போது இதை கொண்ட தடவ சொல்லியுள்ளனர். அவர் அப்பொழுது மது போதையில் இருந்தார். அதன் பிறகு வீட்டிற்கு கொண்டு வந்தனர். வீட்டில் மருத்துவனையில் கொடுத்த மருந்தை தடவிவிட்டு தூங்கியுள்ளார். மறு நாள் நான் வேலையின் காரணமாக அந்த வழியாக சென்றேன். அப்பொழுது என்னுடைய சித்தப்பா வீட்டின் அருகே ஒரே கூட்டமாக இருந்தது என்ன விபரம் என்று அங்குஇருப்பவர்களிடம் கேட்டேன். அதற்கு அவரது மகன் டேவிட், தமிழ்மணி இன்னும்இரண்டு நபர்கள் மேற்கண்ட சம்பவத்தை என்னிடம் சொன்னார்கள். நான் இரவே சொல்லியிருந்தா மருத்துவனைக்கு கொண்டு சென்றிருக்கலாம் என்று அவர்களிடம் நான் கூறினேன். அதன்பிறகு நான் எனது அப்பாவிற்கு போன் செய்தேன். பிறகு என் அப்பா வந்து விட்டார். 108 க்கு போன் செய்து வேதாரண்யம் அரசு மருத்துவனைக்கு கொண்டு சென்றோம். அங்கு சிகிச்சை அளிக்க முடியாது என்று சொன்னார்கள். அதன் பிறகு அ.சா.1 யை அழைத்துக்கொண்டு போய் வேதாரண்யம் காவல் நிலையத்தில் புகார் மனு அளித்தோம். அதன் பிறகு நான் போன் செய்து டேவிட் சகாயத்திடம் அப்பா எப்படி இருக்கிறார் என்று கேட்டேன். அதற்கு அவர் நாகப்பட்டினத்திலிருந்து மேல்சிகிச்கைக்காக திருவாரூர் மருத்துவமனைக்கு போகிறோம் என்று கூறினார். மறுநாள் 07.09.2021 அன்று அவருடைய மகன் அப்பா நிலை தடுமாறி இருக்கிறார் என்று என்னிடம் கூறினார். அதன் பிறகு நான் அவரை பார்ப்பதற்காக சென்றேன். 8 மணிக்கு சென்று 3 மணிக்கு வீட்டிற்கு வந்தேன். அதன் பிறகு வேதாரண்யம் போலீஸ் நிலையத்திலிருந்து என் அப்பாவிடம் போன் செய்து விபரம் கேட்டார்கள். மறுநாள் காலை 8 – 8.30 மணி அளவில் மறுபடியும் வேதாரண்யம்

காவல் நிலையத்திலிருந்து மனோகரனை பற்றி விசாரித்தார்கள். நான் மருத்துவனைக்கு போன் செய்து கேட்டுக்கொண்டு உங்களிடம் பதில் செல்கிறேன் என்று சொன்னேன். அதன் பிறகு நான் மனோகரனின் மகனுக்கு போன் செய்து அப்பாவின் நிலை என்ன என்று கேட்டேன் அதற்கு அவர் அப்பா இறந்து விட்டார் என்ற தகவலை சொன்னார் அதன் பிறகு நான் திருவாரூர் மருத்துவனைக்கு சென்றேன். அப்பொழுது நான் திருவாரூர் சவக்கிடங்கிற்கு அருகே நின்று கொண்டிருந்த எங்களிடம் வேதாரண்யம் டி.எஸ்.பி விசாரித்தார். அவரிடம் நான் நடந்த விபரத்தை கூறினேன். அவர் எழுதிக்கொண்டார். அந்த விபரத்தை நான் இந்நீதிமன்றத்தில் சாட்சியமாக அளிக்கிறேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை</u>

05.09.2021 அன்று இரவு நடந்த சம்பவங்களை எல்லாம் நான் 06.09.2021 அன்று காலை 6.30 மணி அளவில் சி.சி.எல் க்கு வேலைக்கு செல்லும் போது மனோகரன் வீட்டில் போய் தெரிந்து கொண்டேன்.அது வரை 05.09.2021 ல் நடந்த விபரம் எதுவும் எனக்கு நேரிட்டு தெரியாது. எனக்கு இறந்து போனவர் சித்தப்பா முறை வேண்டும். போலீஸார் என்னை திருவாருர் பிணவறையில் விசாரித்த போது ஆஜர் எதிரிகள் சம்பவத்தின் போது டேவிட் சகாயராஜையும் தமிழ் மணியையும் நீங்கள் ஓடிவிடுங்ள் அல்லாவிடில் உங்களையும் அடித்துவிடுவோம் என்று கூறியதை போலீஸார் விசாரணையில் சொல்லியுள்ளேன். அவ்வாறு ஒரு சம்பவம் இல்லை என்றும் மனோகரன் குடிபோதையில் எங்கள் வீட்டாரிடம் தகராறு செய்து கொண்டார் என்றும் என் வீட்டார் அனைவரும் சேர்ந்து ஆஜர் எதிரிகள் மீது பொய்யாக சாட்சியம் அளிக்கிறோம் என்று சொன்னால் சரியல்ல. என் தகப்பனார் பாலகிருஷ்ணன் மற்றும் நான் 06.09.2021 காலை 8 மணிக்கு வேதாரண்யம் காவல் நிலையம் சென்றோம். காவல் நிலையத்தில் வைத்து போலீஸார் கேட்டதற்கு நாங்கள் விபரத்தை சொன்னோம் என்அப்பாவிடம் கையெழுத்து கேட்டார்கள். நான் பொய்யாக எதிரிகளை தொடர்புபடுத்தி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

**Chapter XXIII code of Criminal Procedure**

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Special Sessions Case No. 38 / 2021**

**Deposition of Witness for Prosecution : P.W. 10**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மாசிலாமணி | தகப்பனார் பெயர் கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 27.06.2024

**முதல் விசாரணை**

நான் தற்போது கடினவயல் நடுக்காடு முகவரியில் வசிக்கிறேன். நான் கூலி வேலை செய்துவருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளுக்கு என்னை தெரியும். கடந்த 05.09.2021 ம் தேதி மனோகரன் (இறந்தவர்) வீட்டில் மனைவியிடம் சண்டை போட்டு கொண்டு மீன் பிடித்து வருகிறேன் என்று சுமார் ஒரு 8 மணி அளவில் கடைத்தெரு போயிருக்கிறார். மீன் பிடித்து விட்டு திரும்பி வரும் போது கடைத்தெருவில் சுமார் 10 மணி இருக்கும்அப்பொழுது லேசாக மழை பெய்தது. அந்த நேரம் யோனஸ் வாத்தியார் கடைக்கு அருகில் ஒதுங்கியிருக்கிறார். ஆஜர் எதிரிகள் இருவரும் அங்கு தண்ணீ அடித்துவிட்டு உட்கார்ந்திருந்தார்கள். ஆஜர் எதிரிகளுடைய அப்பா பெயரை சொல்லி இன்னார் மகனா என்று மனோகர் கேட்டுள்ளார் அதற்கு அவர்கள் பறப்பயலே என் தகப்பனார் பெயரையா சொல்கிறாய் என்றும், தகாத வார்த்தைகளால் திட்டியும் ஆஜர் எதிரிகள் மனோகரை அடித்துள்ளார்கள். இறந்து போன மனோகர் அடி தாங்க முடியாமல் பக்கத்தில் உள்ள பட்டறையில் சென்று இரும்பு கம்பியை எடுத்து ஆஜர் எதிரிகளை அடிக்க முற்பட்டுள்ளார் உடனே ஆஜர் எதிரிகள் கம்பியை பிடுங்கி மனோகரின் தலையில் அடித்துள்ளார்கள் அதன் பின்னிட்டு வேதாரண்யம் அரசு மருத்துவமனைக்கு

அழைத்துக்கொண்டு சென்றுள்ளனர். அதன் பின்னர் மேல்சிகிச்சைக்காக நாகப்பட்டினம் அரசுமருத்துவனைக்கும் அதன் பின்னர் சிடிஎஸ் ஸ்கேன் எடுப்பதற்காக திருவாரூர் அரசு மருத்துவனைக்கு சென்றுள்ளார். 06.09.2021 அன்று என் வீட்டிற்கு மேற்படி சம்பவம் குறித்து தகவல் வந்தது. அதன் பிறகு 08.09.2021 நான் மற்றும் ஊரில் உள்ள நபர்கள் மேற்படி திருவாரூர் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அதன் பிறகு அங்கு செல்வதற்குள் அவர் இறந்து விட்டார் என்ற தகவல் கிடைத்தது. அதன் பிறகு நாங்கள் பிணவறைக்கு சென்றோம் அங்கு வேதாரண்யம் காவல் ஆய்வாளர் அங்கு என்னை விசாரித்தார் . மேற்படி தகவலை நான் இந்நீதிமன்றத்திலும் சாட்சியமாக அளிக்கிறேன்.

**எதிரிதரப்பு குறுக்குவிசாரணை**

இறந்து போனவர் எனக்கு சித்தப்பா உறவுமுறை ஆகும். நான் முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் எனக்கு சம்பவத்திற்கு மறுநாள் காலை தான் உறவினர்கள் சொல்ல எனக்கு தெரியும் என்று சொன்னால் சரிதான். உறவினர்கள் என்னிடம் பொய் சொல்லியிருக்கிறார்கள் என்றாலும், என் சித்தப்பா மதுவின் ஆழுகைக்கு உட்பட்டு எங்கள் வீட்டிலும் பல நபர்களிடம் சண்டைபோட்டுக்கொண்டும் அவருக்கு இந்த எதிரிகளால் எந்த காயமும் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல, ஆஜர் எதிரிகளை தவறாக தொடர்பு படுத்தி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

**Chapter XXIII code of Criminal Procedure**

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Special Sessions Case No. 38 / 2021**

**Deposition of Witness for Prosecution : P.W. 9**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தமிழ்மணி | தகப்பனார் பெயர்<br>கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 27.06.2024

**முதல் விசாரணை**

நான் தற்போது கடினவயல், நடுக்காடு முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை பார்த்துக்கொண்டிருக்கிறேன்.ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளுக்கும் என்னை தெரியும். நான் மனோகரன் கொலை வழக்கு சம்மந்தமாக வேதாரண்யம் காவல் நிலையத்திலிருந்து சாட்சி கையொப்பம் கேட்டார்கள் நான் கையொப்பம் போட்டேன். 08.09.2021 ம் தேதி கையெழுத்து போட்டேன். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது அது **அ.சா.ஆ. 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பார்வை மகஜரில் கேட்ட விபரங்கள் எனக்கு தெரியும் அதிலுள்ள கையெழுத்து என்னுடையது.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த கையெழுத்தை திருவாரூர் மருத்துவனையில் உள்ள பிணவறையில் வைத்த தான் போட்டேன். இறந்து போனவரின் அண்ணன் மகன் நான். நான் கையொப்பம் இட்டதில் என்ன விபரம் எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது, அண்ணன் மகன் என்பதால் கையெழுத்து போட்டேன் என்று சொன்னால் சரியல்ல.